# யூனியா உறுப்பினராகுங்கள்

புதிய CLA-இல் செய்யப்பட்ட முன்னேற்றங்கள் சரியான திசையில் நகர்கின்றன. ஆனால், நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறத் தகுதியானவர்கள்! மேலும் வெற்றிகளை அடைய, எங்களுக்கு நீங்கள் தேவை! ஒன்றாக மட்டுமே நம்மால் இன்னும் அதிகமாக சாதிக்க முடியும். இப்போதே யூனியா உறுப்பினராகி, நியாயமான ஊதியம் மற்றும்பணிச்சூழலுக்காக வாதிடுங்கள்.

### கூட்டு வேலைவாய்ப்பு ஒப்பந்தம் (CLA)

CLA-வின் மூலம், சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டதை விடவும் சிறந்த பணி நிலமைகளை நீங்கள் பெற்றுள்ளீர்கள். உதாரணமாக, 13-வது மாதச் சம்பளம், உத்தரவாதமான குறைந்தபட்ச ஊதியம் மற்றும் ஊதியத்துடன் கூடிய பொது விடுமுறைகள். பல துப்புரவுப் பணியாளர்கள் தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தால் மட்டுமே கூட்டுத் தொழிலாளர் ஒப்பந்தம் (CLA) இருக்கும். உங்களுக்குத் தொழிற்சங்கம் தேவை - தொழிற்சங்கத்திற்கு நீங்கள் தேவை.

### ஆலோசனை மற்றும் சட்டப் பாதுகாப்பு

உங்கள் மேலாளர் 13-வது மாதச் சம்பளத்தை சரியாக வழங்காவிட்டால் அல்லது மகப்பேறு விடுப்பின்போது உங்களை பணிநீக்கம் செய்தால் - யூனியா உங்களுக்காக இருக்கிறது! ஒவ்வொரு ஆண்டும், எங்கள் உறுப்பினர்களுக்கு சுமார் 12 மில்லியன் ஃபிராங்குகள் இழப்பீடாகப் பெற்றுத் தருகிறோம்.

### செலவு ஈடுசெய்தல்

யூனியா உறுப்பினராக, உங்கள் மேலாளர் உங்கள் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யும் தொழில் நல நன்கொடையை நீங்கள் திரும்பப் பெறுவீர்கள். வருடத்திற்கு ஒரு முறை எங்களிடமிருந்து பணத்தைத் திரும்பப் பெற கோருவதற்கான படிவத்தை நீங்கள் பெறுவீர்கள்.

### மேலதிக கல்வி / பயிற்சி

எங்கள் உறுப்பினர்களுக்கு, மொவென்டோ (Movendo) கல்வி நிறுவனம் மூலம் ஏராளமான பயிற்சி வாய்ப்புகளை நாங்கள் வழங்குகிறோம். அங்கு நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒரு பயிற்சி வகுப்பில் இலவசமாகப் பங்கேற்கலாம் (உணவு மற்றும் தங்குமிடம் உட்பட). உங்கள் தொழில்முறை பயிற்சிக்காக நாங்கள் 1000 பிராங்குகள் வரை செலுத்துகிறோம்.

இப்போதே உறுப்பினராகுங்கள்!
QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்:

**ஒன்று பட்டால் உண்டு வாழ்வு!**

## உங்களுக்கு அருகில் உள்ள யூனியா

**Unia Aargau-Nordwestschweiz**
0848 11 33 44 ag-nws@unia.ch

**Unia Bern/Oberaargau-Emmental**
031 385 22 22 bern@unia.ch

**Unia Berner Oberland**
033 225 30 20 Thun@unia.ch

**Unia Biel-Seeland/Solothurn**
032 329 33 33 biel@unia.ch

**Unia Fribourg**
026 347 31 31 fribourg@unia.ch

**Unia Genève**
0848 949 120 geneve@unia.ch

**Unia Neuchâtel**
0848 20 30 90 neuchatel@unia.ch

**Unia Oberwallis**
027 948 12 80 oberwallis@unia.ch

**Unia Ostschweiz-Graubünden**
0848 750 751 ostschweiz-graubuenden@unia.ch

**Unia Ticino**
091 821 10 40 ticino@unia.ch

**Unia Transjurane**
0848 421 600 transjurane@unia.ch

**Unia Valais**
027 602 60 00 valais@unia.ch

**Unia Vaud**
0848 606 606 vaud@unia.ch

**Unia Zentralschweiz**
0848 651 651 zentralschweiz@unia.ch

**Unia Zürich-Schaffhausen**
0848 11 33 22 zh-sh@unia.ch

**யூனியா மத்திய செயலகம்**
031 350 21 11 info@unia.ch

**மேலும் தகவல்களுக்கு:**
**www.unia.ch/reinigung**



CLA துப்பரவுத் தொழில் 2026-2029:
ஜெர்மன் மொழி பேசும் சுவிட்சர்லாந்து பகுதியில் உள்ள அனைத்து துப்பரவு ஊழியர்களுக்கும் பொருந்தும்.

# உங்கள் உரிமைகள் பற்றிய ஒரு பார்வை

UNIA



## 1 ஜனவரி 2026 முதல் தொடங்கும் முக்கிய மேம்பாடுகள்

ஜெர்மன் மொழி பேசும் சுவிட்சர்லாந்து பகுதியில் உள்ள துப்புரவுத் தொழிலுக்கான கூட்டு வேலைவாய்ப்பு ஒப்பந்தம் (CLA) உங்கள் பணி நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துகிறது. யூனியா உங்களுக்காக ஒரு புதிய CLA-வை பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுத்தியுள்ளது, இது 2026 முதல் தெளிவான மேம்பாடுகளைக் கொண்டுவரும்.

## மிக முக்கியமான மாற்றங்கள் பற்றி சுருக்கமாக

- குறைந்தபட்ச ஊதியம் உயரும். 2026 ஆம் ஆண்டு முதல், நீங்கள் 3% அதிகமாகச் சம்பாதிப்பீர்கள், மேலும் 2028 ஆம் ஆண்டு முதல் இன்னும் கூடுதலாக 2.5% சம்பாதிப்பீர்கள்.
- CLA பயிற்சி வகுப்பை நிறைவு செய்த பிறகு, 2026 ஆம் ஆண்டில் 5.4% ஊதிய உயர்வு கிடைக்கும்.
- இப்போது, குறைந்த வேலைப்பளு உள்ள துப்புரவுப் பணியாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் உடல்நலக்குறைவு ஏற்பட்டால் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு பெரிய முன்னேற்றம்!

தொழிற்சங்கம், CLA ஆகியவற்றின் காரணமாக, ஒரு 13-வது மாதச் சம்பளம் , ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாட்கள் மற்றும் இன்னும் பல வழங்கப்பட்டுள்ளது.

## முக்கிய அம்சங்கள் பற்றி சுருக்கமாக

### அதிக ஊதியம்

1 ஜனவரி 2026 முதல், நீங்களும் உங்கள் சக ஊழியர்களும் பின்வரும் குறைந்தபட்ச ஊதியத்தைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவீர்கள்:

| ஊதிய வகை | 2026 முதல் | 2028 முதல் |
|---|---|---|
| துப்புரவு பராமரிப்பு | ஒரு மணி நேரத்திற்கு 21.40 | 21.95 |
| CLA பயிற்சி வகுப்புடன் கூடிய துப்புரவு பராமரிப்பு | ஒரு மணி நேரத்திற்கு 22.90 | 23.45 |
| சிறப்பு துப்புரவு | ஒரு மணி நேரத்திற்கு 23.40 | 23.95 |
| CLA பயிற்சி வகுப்புடன் கூடிய சிறப்பு துப்புரவு | ஒரு மணி நேரத்திற்கு 24.90 | 25.45 |
| மருத்துவமனை துப்புரவுப் பணியாளர் | ஒரு மணி நேரத்திற்கு 21.85 | 22.40 |
| CLA பயிற்சி பெற்ற மருத்துவமனை துப்புரவுப் பணியாளர் | ஒரு மணி நேரத்திற்கு 23.35 | 23.90 |
| வாகன துப்புரவுப் பணியாளர் | ஒரு மணி நேரத்திற்கு 23.20 | 23.75 |
| CLA பயிற்சி பெற்ற வாகன துப்புரவுப் பணியாளர் | ஒரு மணி நேரத்திற்கு 24.70 | 25.25 |
| EBA (கூட்டாட்சி தொழில்முறை சான்றிதழ்) தொழிற்கல்வி சான்றிதழ் கொண்ட துப்புரவு நிபுணருக்கான குறைந்தபட்ச ஊதியம் | ஒரு மாதத்திற்கு 4,200. | 4,200. |
| EFZ („அரசின் தகுதிச் சான்றிதழ்“)டிப்ளோமா கொண்ட துப்புரவு நிபுணருக்கான குறைந்தபட்ச ஊதியம் | ஒரு மாதத்திற்கு 4,700. | 4,700. |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மணிக்கூலிக்ள் விடுமுறை ஊதியம் (+8.33%), பொது விடுமுறை ஈடுசெய் தொகை (வகையைப் பொறுத்து +1.5% முதல் 3.1% வரை), மற்றும் 13-வது மாதச் சம்பளம் ஆகியனவற்றைத் தவிர்த்த அடிப்படைச் சம்பளங்கள் ஆகும். மாதச் சம்பளம் (+8.33%) மற்றும் பிற கூடுதல் சலுகைகள்.

## உடல்நலக்குறைவு, விடுமுறை நாட்கள், வேலை நேரம்

| | |
|---|---|
| உடல்நலக்குறைவின் போது ஊதியம் டல்ந | நீங்கள் உடல்நலக்குறைவு அடைந்தால், 3-ஆம் நாள் முதல் அன்றாட நோய் நலத்தொகை வழங்கப்படும். இது இப்போது, வேலைப்பளுவைப் பொருட்படுத்தாமல், அனைவருக்கும் பொருந்தும். |
| 13ஆம் மாத சம்பளம் | மூன்று மாதங்களுக்கு மேல் பணிபுரியும் எவரும் 13-வது மாதச் சம்பளத்தைப் பெறுவர். |
| விடுமுறை நாட்கள் | 20 வயது வரை: 5 வாரங்கள்<br>21 வயதிலிருந்து: 4 வாரங்கள்<br>50 வயது முதல் மற்றும் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் வேலை அனுபவத்துடன்: 5 வாரங்கள் |
| மகப்பேறு விடுப்பு | சட்டப்படி: 80% ஊதியத்துடன் 16 வாரங்கள். சட்டப்படி தகுதி இல்லாத துப்புரவுப் பணியாளர்களுக்கு, CLA-வின் மூலம், 80% ஊதியத்துடன் 8 வாரங்கள் (விடுப்பு) கிடைக்கிறது. |
| பொது விடுமுறை நாட்கள் | ஊதியத்துடன் 9 பொது விடுமுறைகள் |
| பயண நேரம் | நீங்கள் உங்கள் வழக்கமான வேலை இடத்திலிருந்து அல்லது நிறுவனத்திலிருந்து ஒரு வாடிக்கையாளரின் இடத்திற்கு பயணம் செய்தால், உங்கள் வேலை நேரம் மற்றும் பயணச் செலவுகள் கொடுக்கப்பட வேண்டும். |
| மதிய உணவு | உங்கள் வழக்கமான வேலை இடத்திலிருந்து வெளியே குறைந்தபட்சம் 6 மணிநேரம் பணிபுரிந்தால், உணவுச் செலவுகளுக்காக ஒரு நாளைக்கு 16 ஃபிராங்குகள் பெறுவீர்கள். |
| பணி உடை | நிறுவனம் உங்களுக்குப் பணி உடையை வழங்க வேண்டும். உங்கள் பணி உடையை நீங்களே துவைத்து, பழுதுபார்க்க வேண்டியது அவசியம். |
| ஆய்வுகள் | ஊதியக் குறைப்பைத் தடுக்க, நிறுவனங்கள் கண்காணிக்கப்படுகின்றன. |
| அதிக ஊதியத்திற்கான CLA பயிற்சி வகுப்பு | 80 மணி நேரம் நீடிக்கும் ஒரு பயிற்சி வகுப்பை நீங்கள் இலவசமாகப் பெறலாம். அதன் பிறகு, நீங்கள் ஒவ்வொரு ஒரு மணி நேரத்திற்கும் கூடுதலாக 1.50 ஃபிராங்குகள் பெறுவீர்கள். யூனியா உறுப்பினர்கள் இலவசமாக ஜெர்மன் மொழிக்கல்வியையும் பெறுகிறார்கள். யூனியா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்! |

**உங்கள் உரிமைகள் பற்றிய கூடுதல் தகவல்களை இங்கே காணலாம்:**